**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1124/2023

வா.சா.1 மோகனசுந்தரி

**குறுக்குவிசாரணை 1வது பிரதிவாதி தரப்பில்**

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பாகப்பிரிவினைக்காகவும், தான செட்டில்மெண்ட் எழுதிவைத்ததை ரத்து செய்வதற்காகவும் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். எனது தந்தை வழி பாட்டனார் பெயர் ஓ.எஸ்.ராமசாமிக்கவுண்டர் என்றால் சரிதான். பாட்டி பெயர் கண்ணம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு ஓ.ஆர்.சண்முகம், ராசம்மாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரி. ராமசாமிக்கவுண்டரும், கண்ணமாளும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். ஆறுமுகமும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு நானும், என் தாயாரான 1ம் வாதி என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் என்றால் சரி. எனது தாத்தா காலத்திலோ, எனது அப்பா காலத்திலோ தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ராமசாமிக்கவுண்டருக்கு சண்முகம், ராசம்மாள், ஆறுமுகம் ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாத்தா உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் சொத்து பரம்பரை சொத்து என்றால் சரிதான். என் பாட்டி கண்ணம்மாள் எந்த சொத்தையும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், என் தாயாரும் சொத்துக்களை அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம். நாங்கள் அனுபவித்து வரும் சொத்தின் விஸ்தீரணம் சுமார் 2 ஏக்கர் இருக்கும். அந்த சொத்துக்கு செக்குப்பந்தி சொல்லமுடியுமா என்றால் அந்த அளவுக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சண்முகம் சொத்தை பிரித்துக் கொடுக்காமல் அவரே காட்டை ஓட்டி வருவதால்தான் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தந்தை ஆறுமுகம் 13.10.1983ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதிலிருந்து சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**